**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : CC.No. 111/2021</u>**
**<u>வழக்கு சாட்சி PW–1</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரண்யா | தாலுகா | : | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | : | ராஜகோபால் | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | மாவடிக்கால் | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 19th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் மாவடிக்காலில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடைய அக்கா கணவர் ஆவார். எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட இடத்தில் எனது அம்மா கிருஷ்ணம்மாள் குடியிருந்து வந்தார். அந்த இடத்தை நாங்கள் 3 சகோதரிகள் ஆனபடியால் எங்களுக்கு பிரித்து தருவதாக கூறியிருந்தார்கள். மேற்படி, இடத்தில் எனது அக்கா கவிதாவும், அவரது கணவர் எதிரி முத்துவும் அம்மாவுடன் தான் குடியிருந்து வந்தார்கள். அம்மா அந்த இடத்தை பிரிப்பது சம்பந்தமாக அந்த இடத்தில் வைத்து பேசிக்கொண்டிருந்தபோது, 22.074.2019ம் தேதி, இரவு 07.30 மணியளவில் எனது அக்காவின் கணவர் முத்து வாசலில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் என்னையும், எனது அக்கா சுமதியையும், அம்மாவையும் பார்த்து அசிங்கமாக தேவடியா முண்டைகளா என்று தகாத வார்த்தைகளால் பேசினார். எனது அக்கா சுமதி "ஏன் இவ்வாறு பேசுகறீர்கள்" என்று கேட்டதற்கு, எதிரி அவர் மறைத்து வைத்திருந்த

அரிவாளை வைத்து எனது வலது கையிலும், முதுகின் இடது புறமும் வெட்டி காயப்படுத்தினார். அப்போது அதை தடுக்க வந்த எனது அக்கா சுமதியின் இடது மணிக்கட்டில் வெட்டி இரத்தக்காயம் ஏற்படுத்தினார். சம்பவத்தை பார்த்த ரமேஷின் மகன் காளியப்பன் என்ற கொத்தனாரும், சுந்தரி என்பவரும் சத்தம் போட்டனர். அப்போது, எதிரி எங்களைப் பார்த்து, "இப்போது தப்பி விட்டீர்கள், உங்களை துண்டு துண்டாக வெட்டாமல் விடமாட்டேன்" என்று மிரட்டி விட்டு கிழக்கு பார்த்து சென்று விட்டார்.

பின்னர், சுந்தரி, காளியப்பன், எனது அம்மா ஆகியோர்கள் சேர்ந்து எங்களை கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கு வந்த ஆய்வாளர் மேற்படி சம்பவம் சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள். நான் வாக்குமூலம் கொடுத்தேன். அங்கிருந்து என்னையும், எனது அக்காவையும் மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு நானும், எனது அக்காவும் 35 நாட்கள் சிகிச்சையில் இருந்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் நான் கைரேகை செய்தேன். அதில் அறிவேன் சாட்சிகளாக எனது அம்மா கையொப்பமும், எனது அக்கா சுமதியும் கைரேகையும் செய்துள்ளார்கள். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் அரிவாள் வைத்து தான் எதிரி என்னை சம்பவநாளன்று வெட்டினார். அந்த அரிவாள் **சா.பொ.1** ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(நேரமின்மை காரணமாக எதிரி தரப்பு குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.)

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.19 19:10:46 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 111/2021**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணம்மாள் | தாலுகா | : | கடையநல்லூர் |
| கணவர் பெயர் | : | ராஜகோபால் | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | மாவடிக்கால் | வயது | : | 68 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 19th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் மாவடிக்காலில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடைய மகள் கவிதாவின் கணவர் ஆவார். எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் அவரது குடும்பத்துடன் இருக்க கேட்டுக்கொண்டதின் பேரில் நான் அவரது குழந்தைகளின் படிப்பிற்காக ஒத்துக்கொண்டு அவர்கள் என்னுடன் இருக்க சம்மதித்தேன். மேற்படி இடத்தை எனது பிள்ளைகளுக்கு பிரித்து கொடுப்பதற்காக எனது மற்ற மகள்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது, 2019 ம் வருடம், மாதம் சரியாக ஞாபகமில்லை, இரவு 07.30 மணியளவில் எதிரி அரிவாளைக் கொண்டு எனது மகள் சரண்யாவின் வலது கையிலும், முதுகின் இடது புறத்திலும் வெட்டி இரத்தக்காயம் ஏற்படுத்தினார். அதனை பார்த்து, அதனை தடுக்க சென்ற எனது மகள் சுமதியையும் இடது கை மணிக்கட்டில் அரிவாளால் வெட்டி இரத்தக்காயம் ஏற்படுத்தினார்.

சுந்தரி என்பவரும், காளியப்பன் என்பவரும் சம்பவத்தை பார்த்து சத்தம் போட்டனர். எதிரி அங்கிருந்து கிழக்கு நோக்கி ஓடிவிட்டார். அருகில் இருந்தவர்களின் உதவியுடன் எனது மகள்களை ஆட்டோவில் ஏற்றி, கடையநல்லூர் காவல்நிலையம் சென்று விட்டு, கடையநல்லூர் மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்தேன். அங்கு கடையநல்லூர் காவல்நிலைய போலீசார் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காண்பிக்கப்படும் அரிவாள் வைத்து தான் வெட்டினாரா? என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. அரிவாளை எதிரி வெட்டி விட்டு எடுத்து சென்று விட்டார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(நேரமின்மை காரணமாக எதிரி தரப்பு குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.19 19:10:54 +0530